
மந்திரப் பானை

இந்திய நாட்டுப்புற கதை



முன்னொரு காலத்தில் இந்தியாவில் ஒரு மிகவும் ஏழைக் குடும்பம் வாழ்ந்துவந்தது. போதுமான அளவு சாப்பாடு இல்லாததால் குழந்தைகள் எப்போதும் பசியோடு இருந்தார்கள். இதை நினைத்து நினைத்து அம்மா மிகவும் வேதனைப்பட்டாள். இப்படியே போனால் குழந்தைகள் பசியால் இறந்துவிடுவார்கள் என்று கலங்கினார் அப்பா.



ஒரு நாள் குடும்பம் மிகவும் பசியோடு சோர்ந்து கிடக்கும்போது, ஏழை அப்பாவினால் பொறுக்கமுடியவில்லை. தனது குடும்பத்தை எப்படியாவது காப்பாற்ற முடிவு செய்தார். அவர் துர்கா தேவியிடம் உதவி கேட்டு தவம் செய்ய அமைதியான இடத்தைத் தேடிப் புறப்பட்டார். அவர் பல கிராமங்களில் சுற்றித் திரிந்தார், எல்லா இடங்களிலும் கூட்டம் கூட்டமாக மக்கள் இருந்ததால் அவர் தனிமையில் தவம் செய்ய எந்த இடத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை.



கடைசியில் அந்த ஏழை ஒரு காட்டின் எல்லையை வந்தடைந்தார்.
அங்கே தவம் செய்ய ஒரு அமைதியான இடம் கண்டிப்பாக கிடைக்கும் என்று அவர் நம்பினார். அந்த அடர்ந்த காட்டின் நடுவில் வேறு எந்த மனிதனின் கால்தடம் படாத ஒரு சமவெளியை அடைந்தார். அங்கு துர்கா தேவியை நோக்கி தன் தவத்தை தொடங்கினார்.



அந்த நபர் மிகவும் ஏழையாக இருந்தபோதிலும், அவர் ஒரு உண்மையான, புனிதமான பக்தர். ஒவ்வொரு நாளும், அவர் குளித்துவிட்டு, துர்கா தேவியிடம் நெஞ்சுருக பிரார்த்தனை செய்துவிட்டுத்தான் சாப்பிடுவது வழக்கம்.

எனவே துர்கா தேவி அந்த ஏழை மனிதனின் தவத்தை மெச்சி, அவர் முன் தோன்றினாள். "நீயும் உன் மனைவி குழந்தைகளும் சாப்பிட போதுமான சோறு இனி உனக்கு கிடைக்கும்" என்று வரம் அளித்தாள் துர்கா தேவி.



துர்கா தேவி வரமளித்துவிட்டு மறைந்துவிட்டாள்.

அவள் நின்றிருந்த இடத்தில் ஒரு மண் சட்டி தோன்றியது.

அந்த சாதாரணமான சட்டியைப் பார்த்து ஏழை மனிதர் ஏமாற்றமடைந்தார். "சமைக்க அரிசியே இல்லாதபோது சட்டியை வைத்துக்கொண்டு என்ன செய்ய?" என்று வருந்தினார்.


ஆனாலும், அவர் மண் சட்டியை எடுத்துக்கொண்டு தனது ஊரை நோக்கித் திரும்பிச் சென்றார்.



அடர்ந்த காட்டுக்குள் நடப்பது மிகவும் கடினம் அல்லவா? ஏழை மனிதர் கால் தடுக்கி கீழே விழுந்தார். கையிலிருந்த மண்சட்டியும் விழுந்து தரையில் உருண்டது.

சட்டி கவிழ்ந்தபோது, அதிலிருந்து மணமான அரிசி சோறு தரையில் கொட்டியது. அந்த ஏழை மகிழ்ச்சியாலும் ஆச்சரியத்தாலும் உறைந்துபோய் திகைத்து நின்றார்.

துர்கா தேவி தனக்கு ஒரு மந்திர சமையல் பாத்திரத்தை வழங்கியிருப்பதை அவர் புரிந்துகொண்டார். இனிமேல் எப்போதும் அவரும் அவரது குடும்பத்தினரும் வயிறு நிறைய சோறு சாப்பிடலாம் என்று மகிழ்ந்தார்.




ஏழை மிகவும் பசியுடன் இருந்தாலும் குளிக்காமல் துர்கா தேவியை பிரார்த்தனை செய்யாமல் அவர் ஒருபோதும் உணவு அருந்துவதில்லையாதலால் கொட்டிய சோறையெல்லாம் ஒரு பருக்கை விடாமல் சேகரித்து தனது சட்டைத் துணியில் கட்டிக்கொண்டார்.

பின்னர் சட்டியை சுமந்து கொண்டு நடக்கலானார்.



ஏழை மனிதர் காட்டுக்கு வெளியே ஒரு கிராமத்தில்
ஓய்வெடுக்க நினைத்தார். கிராமத்தில் ஒரு சத்திரம்
இருந்தது, அதற்கு அருகில் ஒரு கிணறும் இருந்தது,

அங்கு அவர் குளிக்க முடிவு செய்தார். குளிப்பதற்கு முன்,
ஏழை தனது விலைமதிப்பற்ற சட்டியை சத்திரத்தின்
உரிமையாளரிடம் கொடுத்து, அதைப் பத்திரமாக
பார்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்.



ஏழை மனிதன் குளிக்கச் சென்ற பிறகு, சத்திரத்தின் உரிமையாளர் சட்டியை உற்று நோக்கினார்.

இந்த சாதாரணமான சட்டியை ஏன் பத்திரமாக பார்த்துக்கொள்ளும்படி சொன்னார் என்ற ஆர்வத்தில் சட்டியின் உள்ளேயும் வெளியேயும் திருப்பித் திருப்பிப் பார்த்தார்.

பின்னர் அவர் அதை தலைகீழாக திருப்பியபோது, அதிலிருந்து சோறு மழை போல கொட்டியது. அது ஒரு மந்திர பானை என்று தெரிந்ததும் அதை தானே வைத்துக்கொள்ள ஆசைப்பட்டார்.


எனவே அவர் அதே மாதிரி இருந்த வேறொரு சட்டியை எடுத்து மந்திரப் பானையின் இடத்தில் வைத்துவிட்டார். பின்னர் அவர் தனது மனைவியையும் மகன்களையும் அழைத்து அந்த அதிசய சட்டியைக் காட்டினார்.



ஏழை மனிதன் குளித்துவிட்டு, துர்கா தேவியைப் பிரார்த்தித்து விட்டு , மந்திரப் பானை கொடுத்திருந்த சோறை சாப்பிட்டார்.

பின்னர் அவர் சத்திரத்திற்கு திரும்பி தனது சட்டியை வாங்கிக் கொண்டு நடந்தார். மந்திர பானைக்கு பதிலாக சாதாரண சட்டியை கொடுத்தது அவருக்கு தெரியாது.

நீண்ட பயணம் முழுக்க அவர் தனது குடும்பத்தைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டிருந்தார். சுவையான வெள்ளைவெளேரென இருக்கும் அரிசிச் சோறைப் பார்த்து தன் குடும்பம் எப்படி பூரிப்படையும் என்று கற்பனையில் கண்டு மகிழ்ந்துகொண்டே நடந்தார்.



ஊர் திரும்பிய ஏழை பசியோடு காத்துக்கிடந்த மனைவியும் குழந்தைகளும் இனி மீண்டும் ஒருபோதும் பசியோடு இருக்க வேண்டியதில்லை என்று சொன்னதால் அவர்கள் எல்லோரும் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கொட்டப்போகும் சோறையும் , குழந்தைகளின் ஆரவாரக் கூச்சலையும் எதிர்பார்த்து அவர் சட்டியைத் தலைகீழாகக் கவிழ்த்தார்.

ஆனால் இரண்டும் நடக்கவில்லை. சோறு கொட்டவுமில்லை, குழந்தைகளின் பசியும் வாட்டமும் நீங்கவுமில்லை.

ஒரு சாதாரண பானையை மந்திரப் பானை என்று சொல்லும் தனது கணவருக்கு காட்டில் கிறுக்குப் பிடித்துவிட்டதாக அவர் மனைவி நினைத்தாள்.



துர்கா தேவியே தனக்கு ஒரு மந்திரப் பானை கொடுத்தாள் என்பதால் ஏழைக்கு தன் கண்களை நம்ப முடியவில்லை. துக்கத்தில் மூழ்கிய அவர், சிந்தித்துப் பார்த்தார். குளிக்கப் போகுமுன் தனது சட்டியை சத்திரத்தின் உரிமையாளரிடம் கொடுத்துவிட்டுச் சென்றது நினைவிற்கு வந்தது. அந்த சத்திரத்து உரிமையாளர் தான் தனது மந்திரப் பானையைத் எடுத்துக்கொண்டு, ஒரு சாதாரண மண் பானையை அதற்குப் பதிலாக வைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

தனது மந்திரப் பானையை மீண்டும் கொண்டு வர கிளம்பினார். அவருக்கு புத்தி பேதலித்துவிட்டது என்றும் அதனால் அவர் காட்டில் தொலைந்துவிடக்கூடும் அல்லது கொடிய மிருகம் ஏதாவது அவரைக் கொன்றுவிடும் என்றும் அஞ்சிய அவர் குடும்பம் அவரைத் தடுத்தது. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர் புறப்பட்டார்.



ஏழை தனது மந்திரப் பானையை விட்டுச் சென்ற சத்திரத்தை அடைந்து "என் பானையை எனக்குத் திருப்பிக் கொடுங்கள்" என்று கோரினார்.

ஆனால் சத்திரத்தின் உரிமையாளர் கேலியாக சிரித்து தனது மகன்களை அழைத்து அந்த ஆளை அடித்துத் துரத்தும்படி சொன்னார்.

மிகவும் வருந்திய ஏழை , மீண்டும் ஒரு முறை காட்டுக்குச் சென்று துர்கா தேவியிடம் பிரார்த்தனை செய்து அவளுடைய உதவியைக் கேட்க முடிவு செய்தார்.



அந்த ஏழை மீண்டும் அடர்ந்த காட்டுக்குச் சென்று முற்றிலும் வெறிச்சோடிய ஒரு பகுதியை அடைந்து தவம் செய்தார்.

மீண்டும் துர்கா தேவி அவர் முன் தோன்றினாள். "நான் இன்னொரு மந்திரப் பானை தருகிறேன், அதை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்து" என்று கூறி மறைந்தாள்.

பழைய சட்டியைப் போலவே இன்னொரு சட்டி அங்கே தோன்றியது.



உடனே அந்த ஏழை சட்டியை எடுத்துத் தலைகீழாகத் திருப்பினார்.

ஆனால் சோறுக்குப் பதிலாக, பலவிதமான பேய் பிசாசுகள் பானையிலிருந்து வெளிவந்து அவரை அடித்து உதைக்கத் தொடங்கின. எப்படியோ அவர் பானையை நேரான பக்கம் திருப்பி வைத்த பிறகு, பேய்கள் அவரை அடிப்பதை நிறுத்திவிட்டு மீண்டும் சட்டிக்குள் புகுந்து கொண்டன.

துர்கா தேவி சொன்ன "புத்திசாலித்தனமாகப் பயன்படுத்து" என்பது என்ன என்பதை ஏழை மனிதன் புரிந்துகொண்டார்.



மீண்டும் ஏழை சத்திரத்தை அடைந்தார். மறுபடியும் ஒரு புதிய சட்டியுடன் வந்த ஏழை மனிதனைக் கண்டு சத்திரத்தின் உரிமையாளர் ஆச்சரியப்பட்டார். அந்த புதிய சட்டியும் மிகவும் மதிப்புமிக்கதாக இருக்கும் என்று நினைத்து அந்த இரண்டாவது சட்டியைப் பிடுங்க தனது மகன்களை அழைத்தார்.

அவர்கள் அருகில் வந்ததும் ஏழை மனிதன் புதிய மந்திரப் பானையை தலைகீழாகக் கவிழ்த்தார். பேய் பிசாசுகள்கள் சத்திர உரிமையாளரின் இரக்கமற்ற மகன்களை அடித்து உதைக்க ஆரம்பித்தன. அடி உதை தாங்க முடியாமல் தங்களை காப்பாற்றும்படி அவர்கள் கெஞ்சினர்.

"என் மந்திரப் பானையை திருப்பிக் கொடுங்கள்" என்றார் ஏழை. சத்திர உரிமையாளர் ஓடிப் போய் அதை எடுத்துவந்து கொடுத்த பிறகு, ஏழை மனிதன் புதிய மந்திரப் பானையை நேராகத் திருப்பினார். எல்லா பேய் பிசாசுகளும் சட்டிக்குள் புகுந்து மறைந்தன.



ஏழை இரண்டு கைகளிலும் இரண்டு மந்திரப் பானைகளுடன் தனது வீட்டிற்கு திரும்பினார்.

அவர் திரும்பி வரமாட்டார் என்று வாடிக்கிடந்த குடும்பத்தினர் அவரைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

ஏழை புதிய மந்திரப் பானையை ஒரு பாதுகாப்பான இடத்தில் ஒளித்து வைத்தார் - மீண்டும் பேய் பிசாசுகள் எப்போதாவது தேவைப்படலாம் அல்லவா!



பின்னர் அந்த ஏழை தனது முதல் மந்திரப் பானையைத் தலைகீழாகத் திருப்பினார். அதிலிருந்து சோறு அருவி போல கொட்டியதைக் கண்டு, அவரது குடும்பத்தினர் அனைவரின் முகத்திலும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பரவியது.

அன்று முதல், அந்த ஏழை குடும்பம் வயிறார சோறு சாப்பிட்டார்கள். அதுமட்டுமில்லை முழு கிராமத்திற்கும் போதுமான அளவு சோறு அதில் கிடைத்ததால் பசி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏழ்மையில் இருந்து விடுபட்ட அவர் பல ஆண்டுகள் வசதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தார்.



முற்றும்